
## பாதுகாப்பான செக்ஸ் கடைபிடிக்கவும்

- உடல் திரவங்கள் பரிமாற்றம் இல்லாமல் செக்ஸ் (யோனி சுரப்பு மற்றும் விந்து)
- தவறாமல் ஆணுறை ஒவ்வொரு முறையும் பயன்படுத்தவும்
- செக்ஸ் முன் அல்லது போது அதிக அளவில் மது குடிக்க தவிர்க்கவும், இது உங்கள் கவனத்தை பாதிக்ககூடும்.

## பொறுப்புத்துறப்பு

நாங்கள் இந்த நோயாளி தகவல் சிற்றேற்றில் தற்போதைய மருத்துவ சான்றுகள் மற்றும் கருத்துகள் அடிப்படையில், முழு மற்றும் சரியான விபரங்களை வழங்க முயற்சி செய்துள்ளோம். எனினும், தகவல் மற்றும் ஆலோசனைகள் பல்வேறு ஆதாரங்களில் இருந்தும், காலப்போக்கிலும் மாறுபடலாம். உங்களுக்கு மேலும் கேள்விகள் இருந்தால், உங்கள் மருத்துவர் அல்லது சுகாதாரச்சேவை வழங்குநரை அணுகவும்.

## எங்கள் இடங்குறிப்பு




**DSC கிளினிக்**
31 Kelantan Lane #01-16 S(200031)

### பஸ் சேவைகள்

23, 64, 65, 66, 67, 130, 139, 147, 857
Bugis (EWL/DTL)
Rochor (DTL)
Lavender (EWL/DTL)
Farrer Parkr (DTL)

HIV / STI பதி வு செய்யப ்பட்ட தகவ ல்கள்
6295 2944

HIV / STI அவசர உதவிக்கு
1800 - 2521324 (அலுவலக நே ரங்களில்)
எங்களிடம் முன்பதி வு செ ய்து க ொள்ளவும்

## எங்களுடண் சந்திப்பு முண்பதிவு செய்ய

சந்திப்பு முண்பதிவு மையத்தை அழைக்கவும்
6293 9648

அல்லது மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
apptdsc@nsc.com.sg

**மேலும் மருத்துவகம் தகவல் கிடைக்க எங்கள் இணையதளம் WWW.DSC-CLINIC.SG**
**அல்லது எங்கள் FACEBOOK - WWW.FACEBOOK.COM/DSCSG**


NGU-T-1
Printed - January 2017


# பாலகநோய் நுண்ணுயிரி அல்லாத சிறுநீர்ப் புறவழி அழற்சி

(NON-GONOCOCCAL URETHRITIS (NGU)

NATIONAL SKIN CENTRE

DSC Clinic

## பாலகநோய் நுண்ணுயிரி அல்லாத சிறுநீர்ப் புறவழி அழற்சி என்றால் என்ன (NGU)?

பாலகநோய் நுண்ணுயிரி அல்லாத சிறுநீர்ப் புறவழி அழற்சி என்பது சிறுநீர் குழாயில் ஏற்படும் வீக்கம் ஆகும்.(சிறுநீர்ப்பையில் இருந்து சிறுநீரை வெளியே கொண்டு செல்லும் குழாய் ஆகும்) இது மேகவெட்டை நோயினால் ஏற்படுவது அல்ல. மூன்றில் இரண்டு பங்கு NGU பால்வழி தொடர்புகளால் ஏற்படும் கிளமீடியா நோயினால் ஏற்படுகிறது. சில நேரங்களில் (எ.கா.: HSV, டிரைகோமோனாஸ், மைக்லோபிலாஸ்மா, ஜெனிடாலியம்) போன்ற பால்வழி தொடர்புகளால் ஏற்படும் நோயினால் சில NGU-க்கள் ஏற்படுகின்றன. மூன்றில் ஒரு பங்கு NGU-வில் பால்வழி தொற்றுக்கள் தென்படுவதில்லை.

இரசாயனங்கள் மற்றும் அரிப்பு உண்டாக்கக்கூடியவைகளால் இது ஏற்படுகிறது..

## பாலகநோய் நுண்ணுயிரி அல்லாத சிறுநீர்ப் புறவழி அழற்சி எவ்வாறு பரவுகிறது?

பிறப்புறுப்பு, வாய்வழி மற்றும் குத செக்ஸில் ஈடுபடும் போது ஒருவரிடமிருந்து மற்றவருக்கு இந்த NGU பரவுகிறது.

## அறிகுறிகள் என்னென்ன?

- சிறுநீர் வெளியேற்றம் (தெளிந்த, வெள்ளை மற்றும் மஞ்சள் நிறம்)
- சிறுநீர் கழிக்கும் போது எரிச்சல் மற்றும் வலி
- ஆண்குறியின் முனைப்பகுதியில் அரிப்பு மற்றும் எரிச்சல் ஏற்படுதல்

மேகவெட்டை நோய்க்குத் தோன்றும் அறிகுகளே இதற்கும் தோன்றுகிறது. ஆய்வக பரிசோதனையின் மூலம் இதனை உறுதி செய்துகொள்ள முடியும்.

## அறிகுறிகள் தோன்றுவது எப்போது?

நோய்த்தொற்று ஏற்பட்டு 1 - 3 வாரங்களில் அறிகுறிகள் தென்பட ஆரம்பிக்கின்றன.

## நோயினை கண்டறிவது எவ்வாறு?

ஆண்குறியின் சிறுநீர்க்குழாய் முனைப்பகுதியில் இருந்து ஒரு பருத்தி துடைப்புத்துண்டு குச்சியால் மாதிரியை சேகரித்து நுண்ணோக்கியின் மூலம் ஆய்வு செய்வர். செல்களில் சீழ் பிடித்திருப்பது நோய்த்தொற்று ஏற்பட்டிருப்பதை தெரிவிக்கிறது. கிளமீடியா மற்றும் மேகவெட்டை நோய்க்கான சிறுநீர் பரிசோதனையும் செய்யப்படுகிறது.

## பாலகநோய் நுண்ணுயிரி அல்லாத சிறுநீர்ப் புறவழி அழற்சி குணப்படுத்தக்கூடியதா?

இந்நோய்க்கு மாத்திரைகள் மற்றும் எதிர் உயிரிகள் எடுத்துக்கொள்ளும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிலருக்கு ஒன்றிற்கு மேற்பட்ட சிகிச்சை முறைகள் அவசியமாகும். இது பால்வினை நோய் என்பதால் உங்களுடன் உடலுறவில் ஈடுபடும் நபரும் அறிகுறிகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சிகிச்சை எடுத்துக்கொள்வது அவசியமாகும். இதனால் தொற்று ஏற்படுவது முன்பே தடுக்கப்படுகிறது.

## இந்நோய் வேறு தொந்தரவுகளை ஏற்படுத்துமா?

NGU நோய் பால்வினை நோயால் (குறிப்பாக கிளமீடியாவால்) ஏற்பட்டு அதற்கு சிகிச்சையளிக்காமல் இருந்தால் அந்த நோய்த்தொற்று:

- இனப்பெருக்க உறுப்புகளான விந்தகம் மற்றும் விந்தணு முதிர்ச்சிப்பையில் பரவி வலி மற்றும் வீக்கத்தை ஏற்படுத்துகிறது.
- இது மலட்டுத்தன்மையை ஏற்படுத்துகிறது. மேலும் தோல், மூட்டுகள் மற்றும் கண்களில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.
- சிகிச்சை அளிக்கப்படாத பெண் துணைக்கு கூபக அழற்சி, பெண் மலட்டுத்தன்மை மற்றும் கருக்குழாயில் கருவளர்ச்சியினை ஏற்படுத்துகிறது.

## தொடர்சிகிச்சைக்கு மீண்டும் வரவேண்டுமா?

- DSC கிளினிக்கில் நோயாளிகளுக்கு தொடர்சிகிச்சை முறைக்கு முன்பதிவு செய்துகொள்ள வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- NGU தொற்று ஏற்பட்டவர் சிகிச்சை மேற்கொண்ட நாளிலிருந்து 14 ம் நாள் மறுசிகிச்சை பெற அறிவுறுத்தப்படுகிறார்கள். துல்லியமான பரிசோதனை முடிவு தெரிய நோயுற்றவர் பரிசோதனை செய்வதற்கு 4 மணி நேரத்திற்கு முன்பிருந்து சிறுநீர் கழிப்பதை தவிர்க்க வேண்டும்.
- நோயுற்றவருக்கு 3வது மாதம் ஒரு முன்பதிவு தேதி அளிக்கப்படுகிறது. அது மேகநோய்க்கான (ஸிஃபிலிஸ்) இரத்தப்பரிசோதனை ஆகும்.

## முக்கிய குறிப்புகள்:

- நோயுற்றவர் மருத்துவரை அணுகி ஆலோசனை பெறவும். தானாக மருந்து உட்கொள்வது கூடாது.
- ஏதேனும் ஒவ்வாமை இருந்தால் அதை முன்பே மருத்துவரிடம் தெரிவிக்கவும்.
- நோய் குணமாகும் வரை உடலுறவைத் தவிர்க்கவும்.
- உங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சை முறைகளை முழுவதும் மேற்கொள்ளவும்.
- உங்களுடன் உடலுறவு கொள்ளும் நபரையும் (நபர்களையும்) சிகிச்சை மேற்கொள்ள அறிவுறுத்தவும். இது அவரை நோய்த்தொற்றிலிருந்து பாதுகாக்கும்.
- எப்பொழுதும் உங்கள் துணை மற்றும் பாலியல் தொழில் புரிவோரிடம் பாதுகாப்பான உடலுறவு மேற்கொள்ளவும்.